www.tamilarangam.net

# தமிழ்மக்களே எச்சரிக்கை !

அன்புள்ள பரிதாபத்துக்குரிய தமிழ்மக்களே!

தமிழ் ஈழ விடுதலை என்ற பெயரில் வந்து அதை மறந்து தனது சக தமிழ்ப் போராளிகளையே கொன்று குவிக்கும் விடுதலைப்புலி? (தறுதலைப் பூனை) பிரபாகரனின் கொடிய கொள்கை ஒழிய வேண்டும்.

தனது எதேச்சாதிகாரமும் சர்வாதிகாரமும் நிலைபெற வேண்டும் என்ற சதிகார சண்டாளர்கள் எமது தமிழ்நாட்டு மண்ணை விட்டு வெளியேற வேண்டும்.

தனது குலத்தையே கெடுக்கவந்த கோடரிக்காம்பு குள்ள நரியின் அட்டகாசங்கள் அடங்க வேண்டும்! கட்சிகள் என்ற பேதம் காட்டி வாழத்துடிக்கும் இளந்தளிர்களை கொய்து மண்ணில் எறியும் கைகள் ஒடிய வேண்டும்!

விடுதலைக்காக தம்மை அர்ப்பணித்த தமிழ்த் தனையர்களை தன்னுணர்வு இல்லாது சுட்டுக்கொல்லும் தமிழ்த்துரோகி ஒழிய வேண்டும்!

நவீன ஹிட்லர் ஜெயவர்த்தனேவா பிரபாகரனா ! சிங்களவன் இனத்துவேசத்தினால் நம்மினத்தை துவம்சம் செய்தான்.

எம்மவன் என்று சொல்லத் தகுதி இழந்து பிரபாகரன் எமது மக்களையே கொல்வதன் கொடிய நோக்கம் என்ன பிரபாகரனின் தறுதலைக்கூட்டம் தமிழ்நாட்டை விட்டு வெளியேற வேண்டும் அல்லது அவனது கொடிய எண்ணங்கள் அவனைவிட்டு விலக வேண்டும் என பரிதவிக்கும் தமிழக மக்கள்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் (L.T.T.E.) தலைவர் பிரபாகரனுக்கு

# பகிரங்க வேண்டுகோள்

தமிழ் ஈழ விடுதலையை முன்னெடுக்கும் சகல இயக்கங்களையும் ஒரே நிலையில் நாம் வரவேற்று, ஆதரவளித்துக் கொண்டிருக்கிறோம் என்பது அனைவருக்கும் தெரிந்த விசயம்.

இந்த நிலையில் விடுதலைப் போராட்டக் கட்டுப்பாட்டையே மீறி தலைமைப் பீடங்களையே அவமதிக்கும் காரியமாக நீர் திருமணம் செய்து கொண்டதைக்கூட தமிழ் ஈழம் வென்றெடுக்கப்பட வேண்டும் என்ற ஒரே காரணத்தால் மன்னித்து, தொடர்ந்து எமது ஆதரவை வழ்ங்கி வந்தோம்.

ஆனால் ஈழ விடுதலை இயக்கங்களிடையே ஒற்றுமையை வலியுறுத்தி, அதற்காகப் பாடுபட்டு ஈழம் தேசிய விடுதலை முன்னணியை உருவாக்யதோடல்லாமல், ஈழமக்களுடன் ஒன்றிணைந்து, ஈழத்திலேயே தங்கியிருந்து போராட்டத்தை வலுப்படுத்தி வரும், டெலோத்தலைவர் சிறி சபாரத்தினம் அவர்களை கொலை செய்யும்படி உத்தரவிட உமக்கு என்ன தகுதியுண்டு?

தமிழக மண்ணிலே சகல போகங்களையும் அனுபவித்துக்கொண்டு காட்டுமிராண்டித்தனமான இந்த நடவடிக்கைகளை தூண்டிவிடும் உம்மை இனிமேல் தொடர்ந்தும் நாம் அனுமதிப்பதென்றால் தமிழக மக்கள் என்ன அவ்வளவு முட்டாள்களா?

தமிழ் ஈழம் மலரவேண்டுமென்று ஆவலுடன் காத்திருக்கும் எமது கனவுகளை சின்னா பின்னமாக்கும் உம்மை சின்னா பின்னமாக்கி விட்டு, ஈழ விடுதலையை வென்றெடுக்க எங்களால் ஆன சகல ஆதரவையும் ஏனையோருக்கு வழங்க பின் நிற்கமாட்டோம்.

1. தனலக்கனம் பிடித்து அலையும் நீரும் உமது போராளிக் கும்பலும் ஈழத்தமிழ் மக்களையும், பச்சிளம் குழந்தைகளையும் கொன்றதற்கு என்ன பதில் கூறப்போகிறீர்கள்?

2. ஈழப்போராட்டத்திற்கு வலுவூட்டிய மிகப்பெரிய தாக்குதல்களை நடத்திய டெலோ இயக்கத்திற்கு ஆதரவளித்த ஈழ மக்களின் வாசஸ்தலங்களை. வெடி வைத்து தகர்க்க நீங்கள் யார்?

3. விடுதலைப்புலிகள் என்று பெயரை மட்டும் வைத்துகொண்டு எம்மை தொடர்ந்தும் ஏமாற்ற முயற்சிக்கும் உம்மையும் உமது குழுவையும் நாம் இனியும் மன்னிக்கலாமா?

தமிழக மக்களை தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் என்ற பெயரில் தொடர்ந்தும் ஏமாற்ற முயன்றால், உம்மையும் உமது கும்பலையும் 24 மணி நேரத்தில் இந்திய மண்ணை விட்டு அகற்றிவிட்டு, ஏனைய இயக்கங்களையும் வலுவூட்டி ஈழத்தை நாம் வென்றெடுப்போம். இது உறுதி.

இந்திய ஈழ நட்புறவுக்கழகம் - சென்னை-53

---

வாழ்க தமிழ்! வளர்க தமிழ்!

"எமது மக்கள் கொல்லப் படுகையில் அவர்களது உடமைகள் சூறையாடப் படுகையில் எமது மண் ஆக்கிரமிக்கப் படுகையில் இந்த அக்கிரமங்களுக்கு ஆணையிட்டவர்களோடு நாம் ஒரு போதும் சமரசம் செய்யப்போவதில்லை. இவ் அக்கிரமக்காரர்களை எமது மண்ணிலிருந்து அகற்றி அங்கு மக்கள் ஆட்சியினை நிறுவுதே எமது இறுதி நோக்கமாகும்."

தோழர் சிறி சபாரத்தினம்

அண்மையில் தமிழீழத்தில் தமிழீழ விடுதலை இயக்கத் தலைவர் (Telo) சபாரத்தினம் உட்பட, இயக்க போராளிகள் மீதும் தமிழீழ விடுதலைப் புலிகளால் அழித்து விடப்பட்ட வன்முறையில் சுமார் 100க்கும் மேற்பட்ட தமிழீழ விடுதலை இயக்கப் போராளிகள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் இதை வன்மையாக கண்டிக்கிறோம். மேலும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை பின்னடையச் செய்யும் நோக்கோடு செயல் படும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை தாய்த் தமிழக மக்களாகிய நாங்கள் வன்மையாக எச்சரிக்கிறோம்!

வெளியீடு ; 5
நாள் ; 2—5—86

இவண்
சுதந்திர தமிழீழ விடுதலை
ஆதரவு இயக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# Dearest Poor Tamils !

The Tamil Militants who are fighting for liberation are acting alike terrorists as Jayawardana describes,

The major terrorist group of Pirabahar has starterd to butcher its own nation to build his dictator ship ir tamil ealam he and his group have taken the first step as killing and keen on distroying another group called Telo, Pirabaharan's group has butchered many Tamil freedom fighter without mercy. The cold blood murders should stop or the perfidious rascols Pirabaharan and his group should quit from our indian's soil. We don't want to make our soil to loose it's sacred after keeping the murderes in our holyland who is the modern hitler Jayawardana or Pirabaharan the egdist Prabaharan has declared some poster in.

Tamil eelam as ' We Don't want indian help we can find our own way and we know how to solve our problem, we don't want another country to intereear in our internal affairs!

Because Pirabaharan know that india will never allow him to get the eelam on his hand because india knows he is areal terrorist, so please indians fight against the evil and chase the terrorist out of our holy land or Pirabaharan should chase his egoistic and imperialist ideas,

THE TAMILNADU PEOPLE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்